1971 அக்டோபர் 22]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த யோசனை பதிவு செய்யப்பட்ட உற்பத்தியாளர்களுக்குப் பாதகமாக அமையும். அவர்களுக்குத்தான் முதலிடம் அளிக்க வேண்டும். ஆகவே அவர்களுக்கு விலைவாய்ப்பு கொடுக்க வேண்டும். கரும்பு விலையை எப்படி நிர்ணயிக்கவேண்டுமென்று விதி இருக்கிறது. அதன்படி நிர்ணயிக்கிறார்கள்.

### மன்னியாற்றுப் பாசனம்

* 24 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மாயூரம், மணல்மேடு பகுதியிலுள்ள மன்னியாற்றுப் பாசனத்தைப் பராமரிப்பு செய்ய அரசுக்கு உத்தேசம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : உண்டு. மன்னியாற்றின் கடைமடைப் பாசனத்தில் தண்ணீர் பற்றுக்குறை இருப்பதால் கொள்ளிடம் கீழ் அணையிலிருந்து பிரியும் குமிக்கி மன்னியாற்றில் அதிக நீர் விடப்பட்டு மன்னியாற்றின் கடைமடைப் பகுதிக்கு அனுப்பப்படுகிறது. இதனால் மன்னியாற்றின் கடைமடைப் பாசனம் இப்போது பாதிக்கப்படாமல் இருக்கிறது.

### கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே அணை

* 25 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அணைக்கரைக்குக் கீழே கொள்ளிடம் ஆற்றில் மழைக்காலங்களிலும் வெள்ளக் காலங்களிலும் சேதமாகும் தண்ணீரை ஒரு அணை கட்டி அதன் மூலம் விவசாயத்திற்கு பயன்படுத்த ஏதேனும் திட்டம் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

### ஒட்டப்பிடாரத்தில் விவசாய ஆராய்ச்சிப் பண்ணை

* 26 வினா.—திரு. எம். முத்தையா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஒட்டப்பிடாரம், சாலிகுளத்தில் தமிழ்நாடு அரசின் விவசாய ஆராய்ச்சிப் பண்ணை ஆரம்பிக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனின், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஒட்டப்பிடாரம், சாலிகுளத்தில் விவசாய ஆராய்ச்சிப் பண்ணை அமைக்கும் செயற் குறிப்பு எதுவும் அரசின் பரிசிலனையில் இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.